உ

சிவமயம்



அமரர்

# திருமதி சின்னத்தம்பி தங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

25-09-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மாதகலைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி சின்னத்தம்பி தங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

25-09-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்

இருந்து இமைப்பொழுதும் உறங்காது

எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி - நாம்

வாழும் காலமெல்லாம் வழிகாட்டியாய் இருந்து

எம்மை பேணி பாதுகாத்து - எமக்கு

கல்வி அறிவையும் நற்பண்புகளையும் ஊட்டி வளர்த்து

எம்மை நல்வழிப்படுத்தி அனைவரும் போற்ற

வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த

எமது அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்களில்

இம்மலரை காணிக்கையாக

சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**

**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தினை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

# பஞ்சபுராணம்

## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழுபாடியுள் மாணிக்கமே
அன்னை உன்னை யல்லால் இனியாரை நினைக்கேனே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலய் யரிந்துநீ
பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய் தேனினைச் சொரிந்து
புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருவ தினியே

## திருவிசைப்பா

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செருநீர்க்
கிடையனா ருடையஎன் நெஞ்சில்
பாடிலா மணியே மணியுமிழ்ந்து ஒளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினாய் எனினும் உட்புகுந்து அடியேன்
நெஞ்செலாம் நிறைந்து நின்றாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
 ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
 சீராட்டுந் திங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம் நெக
 ஊறும் அமுதினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத் தன் பாற்படுத்
 தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியா யுணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா யேகமாகி பெண்ணுமா யாணுமாகி
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஐங்கரனை ஒத்தமன மைம்புலமகற்றிவளர்
 அந்தி யக லற்றநினை அருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ முத்தியுனை
 அன்பொடு துதிக்க மனம் - அருவாயே
தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
 சந்திர வெளிக்குள் வழி அருள்வாயே
தண்டிகை கனப்பவுசு எண்டிகைம திக்கவளர்
 சம்பிரம விதத்துடனென் - அருள்வாயே
மங்கையர் சுகத்தை வெகு இங்கிதமென் றுற்ற மனம்
 உந்தனை நினைந்தனைய அருள்வாயே
மண்டலிகரம் பகலும் வந்த சுபரட்சைபுரி
 வந்தனை சுபுத்தியனை அருள்வாயே
கொங்குலுயிர் பெற்று வளர் தென்கரையிலப்பரருள்
 கொண்டுமுட லுற்றபொருள் - அருள்வாயே
குஞ்சர முகற்கிளைய கந்தனென வெற்றிபெறு
 கொங்கண கிரிக்குள் விளர் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறையறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதகல்
# பாணாக வெட்டியம்மன் கீர்த்தனைகள்

**கீர்த்தனை 1**

**பல்லவி**

புவனமெல்லாம் ஆளுகின்ற புவனேஸ்வரி அம்மா
கவனமுடன் எங்களையும் காத்திடவா தாயே

(புவனமெல்லாம்)

**அனுபல்லவி**

அவனியிலே நாங்கள் படும் அல்லலறியாயோ
ஆதரிக்க நீயின்றி ஆர்வருவார் அம்மா

(புவனமெல்லாம்)

**சரணம்**

பேதலித்து உன்மக்கள் வாடுவதும் முறையோ
பேணி எம்மைக் காத்திடுதல் பெற்றவளின் கடனே
காதலுடன் கைகூப்பி வணங்குகின்றோம் தாயே
காத்திடவே வந்திடுவாய் கண்ணகையோடிணைந்து
தீ தொன்றும் அணுகாது உன்னிழலில் இருந்தால்
தேவிபதம் தினம் தினம் வணங்க வர வணங்கி வரம் பெறுவோம்.

(புவனமெல்லாம்)

**கீர்த்தனை 2**

**பல்லவி**

பாணாக வெட்டியிலே பவணிவரும் அம்மா
பேணாமல் விடமாட்டாள் பெற்ற மக்கள் எம்மை

(பாணாக வெட்டியிலே)

**அனுபல்லவி**

வீணாக மனங்கலங்கி அழுதிடவே வேண்டாம்
வேண்டும் வரம் அருள்வதற்கு விரைந்தோடி வருவாள்

(பாணாக வெட்டியிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

தானாக உணர்ந்தவளின் தாழிணைகள் தொழுதால்
காணாமல் பறந்துவிடும் கடுவினைகள் யாவும்
பாணாக வெட்டிக் குளத்தருகில் மலர்ந்த
பாவை புவனேஸ்வரித்தாய் பாதமலர் பணிவோம்
கோணாமல் வரந்தருவாள் மாதகலூர் மாதா
கோதையவள் அருளிருக்க குறையெமக்குண்டோ.

(பாணாக வெட்டியிலே)

## கீர்த்தனை 3

### பல்லவி

மாதகலூரெல்லையிலே மகிமையுடன் தங்கி
மக்களையும் மாக்களையும் காத்திடும் பெண் தெய்வம்

(மாதகலூரெல்லையிலே)

### அனுபல்லவி

மாதகலிலே வெப்பு நோய் வருத்தங்கள் வந்தால்
மாதாவிடந்தானே சரண்புகுவோம் நாமே

(மாதகலூரெல்லை)

### சரணம்

தீதகல் வேப்பிலையால் தேகத்தை வருடித்
தீர்த்திடுவோம் தேவியவள் திருநாமங்கள் ஓதி
ஏதாயினும் வரங்களை நாம் இரந்து கேட்டாலும்
எல்லாமே ஈந்தருளும் எல்லையில்லாக்கருணை
பாதமலர் சிரசின்மேல் பதித்து மனம் நெகிழ்ந்து
பக்குவமாய் வணங்கிமேல் பதமடைவோம் நாமே

(மாதகலூரெல்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீர்த்தனை 4**

**பல்லவி**

அம்ப புவனேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதரித்திடும் தெய்வம் நீயன்றி வேறு யார்?

(அம்பபுவனேஸ்வரி)

**அனுபல்லவி**

ஆன்மாக்களின் மலங்கள் நீங்கிடத்திரு
அருள்செய்து முத்தியெனும்
மேன்மை அடைந்திட மெல்ல அருள் புரிவாய் தாயே

(அம்பபுவனேஸ்வரி)

**சரணம்**

அம்மாவைப் போலவே
அன்புகாட்டிடும் தெய்வம்
அறிவு புகட்டையில் சரஸ்வதிதேவி
அழகு, செல்வமளிக்கும் இலக்குமியாகி
துன்பங்கள் நீக்கி வீரமருளும்
துர்க்காதேவியும் நீயேயல்லவா

(அம்பபுவுனேஸ்வரி)

**கீர்த்தனை 5**

**பல்லவி**

தாயே நீ இரங்கம்மா அம்மா புவனேஸ்வரி
தரணியை காத்திடும் தெய்வம் நீயன்றோ நீ

(தாயே)

**அனுபல்லவி**

மாயா உலகினில் மயங்கியே உழல்கின்றார்
காயத்தை மெய்யென்றே களிநடம் புரிகின்றர்

(தாயே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

தூயவளே கண்ணகையைத் தோழியாய்க் கொண்டவளே
மாயனின் சோதரியே மகுடனை வதைத்தவளே
நேயமா யெந்தன் நிலையையுயர்த்திடுவாய்
மாயவலையினின்று மாதாவே எனைக் காப்பாய்
வாயாலே உன் புகழை வகைவகையாய் பாடுகிறோம்
தாயே இருந்தெம்மைத் தலைத்தாங்கிக் காத்திடம்மா

(தாயே)

## கீர்த்தனை 6

### பல்லவி

அம்பிகையே அருள்வாய், பாணாக வெட்டி வாழும்
பார்வதியே வந்தெம்மை ஆண்டிடுவாய்

(அம்பிகையே)

### அனுபல்லவி

நம்பிடுமடியவர் நாடியே வருகிறார் என்றும்
வெம்பிடாதவர்களைத் காத்திடல் வேண்டும்

(அம்பிகையே)

### சரணம்

பொங்கலும் பூசையும் செய்கிறார் பக்தர்கள்
புனிதமாய் அபிடேகம் புரிகிறார் பூசகரும்
மங்கலமான வாத்தியங்கள் முழங்கியே
மாண்புடன் திருவிழாக் கொண்டாடுகின்றனர்
இங்கிவர் அன்பினைக் கண்டதால் இரங்கியே
அம்பிகையே அருளைப் புரிந்திடு அம்மா

(அம்பிகையே)

தங்கமும் வைரமும் நாம் கேட்கவில்லை
தாழ்விலாதுன்னடி பணிந்து நிற்கின்றோம்
பொங்கிடும் அருள்தனை எங்கள் மேற் பொழிந்து
போற்றிடும் முத்திக்கு வழிகாட்டிட வேண்டும்

(அம்பிகையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீர்த்தனை 7**

**பல்லவி**

எப்படித்தான் அழைப்பேனோ எங்கள் புவனேஸ்வரியை
எப்படி நான் அழைப்பேனோ? எங்கள் பராசக்தியை

(எப்படி)

**அனுபல்லவி**

அம்பிகை என்பேனோ ஆரணி என்பேனோ
இன்புடன் இலக்குமி! ஈஸ்வரி என்பேனோ
உன்னதமான உமாதேவி மாதகல்
ஊராளத் தோன்றிய உத்தமியே

(எப்படித்தான்)

**சரணம்**

எப்படி அழைப்பினும் எமக்கருள் புரிந்திடும்
ஏந்திழையே எங்கள் ஈஸ்வரியை
ஐங்கரனின் தாயே ஆறுமுகனை ஈன்ற அம்மா
பைங்கிளியே எங்கள் பரமனின் பத்தினியே
ஒருமையுடனுனைப் பணிந்திடுமன்பர்க்கு
ஓங்கிய நலன்களை உவந்தளிக்கும் தாயே
ஔடதமாகி எங்கள் அருநோய்கள் தீர்த்திடும்
அம்மா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி

(எப்படித்தான்)

**கீர்த்தனை 8**

**பல்லவி**

அற்புதமாயுதித்தாள் அல்லிமவர்க் குளத்தில் அழகு மலராக
அற்புதமாயுத்தித்தாள் அடியார் குறைபோக்க

(அற்புதமாய்)

**அனுபல்லவி**

சொற்பதத்திற் கெட்டாச் சுந்தரவல்லித் தாயாள்
சொர்ணமாம்பிகையாக வடிவெடுத் தருள்வாள்

(அற்புதமாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

நற்கதியருளும் நாயகியிவளே
நாதியற்றோரின் தாயவளாவாள்
பொற்பதம் பணிந்தால் சகல போகமுமருள்வாள்
போற்றித் துதித்திட்டால் பேற்றையுமருள்வாள்

(அற்புதமாய்)

## கீர்த்தனை 9

**பல்லவி**

தேரினிலே வருங்காட்சி தெவிட்டாது அம்மன்
சித்திரத் தேரினிலே வருங்காட்சி தெவிட்டாது

(தேரினிலே)

**அனுபல்லவி**

பாரினில் எங்குமே பார்க்கக் கிடைக்காது
பாணாக வெட்டியம்மன் பச்சிலைக் காட்சியை

(தேரினிலே)

**சரணம்**

ஊரவர் யாவரும் ஒரு மனதுடன் கூடி
உன்னதமாகவே திருவிழா வெடுத்துச்
சீருடன் அபிடேகம், சிறந்த அலங்காரம்
செய்து மேளதாளத்துடன் வலம் வருவர்

(தேரினிலே)

பக்தர்கள் பலரும் கூடி நின்று பரசவமுடன்
பலர் பஜனைகள் பாடிட சித்தங்களித்திடக்
கண்ணகையுடனே திருவீதி வலமாய்
வந்திடுங் கோலம் மெத்த மகிழ்வுடன் யாவருங்காண

(தேரினிலே)

பராசக்தி தன்னருளைச் சார்ந்தவர்க்கருளி
சாந்தமும் அமைதியும் நிலவிடச் செய்து
நித்தமும் மாதகல் நிம்மதியாய் வாழ வைத்த
நித்தியகல்யாணி புவனேஸ்வரியம்பாளே

(தேரினிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீர்த்தனை 10**

**பல்லவி**

என்னை தவம் செய்தேன் இப்புவியில்
அன்னை புவனேஸ்வரியின் அழகை ரசிப்பதற்கு

**அனுபல்லவி**

வண்ணக் கலையுடுத்து வாளினைக் கையிலேந்தி
சிங்காசனத் தமரும் தேவியை தேர்த்தரித்தோம்

(என்ன தவம்)

**சரணம்**

மண்ணுலகிலுள்ளவர்கள் மனக்கவலை தீர்த்தருள
மாதகல் பதியுறையும் மலைமகளே உனைத்துதித்தோம்

(என்ன தவம்)

பாடிப் பரவுகின்றோம் பராபரையே உன் கமலம்
தேடித் தொழுது நின்றோம் தேவியே வரமருள்வாய்

(என்ன தவம்)

வேண்டிய வரங்களெல்லாம் விரும்பி நிதம் தந்தவளே
ஆண்டி முருகனோடு ஆனைமகன் தாயும் நீயே

(என்ன தவம்)

அம்மா உனை வணங்க அழும் அடியார் துயர் தீர்த்து
இம்மாநிலம் முழுதும் ஏற்றமுடன் வாழவைப்பாய்

(என்ன தவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி [கண்ணகை அம்மன்]

மலையரசி மாதரசி மங்காத புகழரசி
மாதவத்து பேரரசியே
மாணிக்க தேரேறி மகிழ்வாக பவனிவரும்
மங்கலத் தாயரசியே
கலையரசி கயலரசி கனிவான மொழியரசி
கற்கண்டு சொல்லரசியே
காவியத் தமிழ்நெஞ்சில் கருணையாம்
நிலை தந்து
களிக்கின்ற பூவரசியே
சிலையாக நின்றாலும் சீரான வாழ்வுதரும்
செம்மைச்சேர் எழிலரசியே
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியவள் அருளாசியே
நிலையான வாழ்வுக்கு நீங்காத ஒளியூட்டும்
நெறியான தாயரசியே
நித்தமும் சித்தத்தில் நின்றுநீ அருளூட்டும்
நீடுபுகழ் ராஜேஸ்வரியே

# மதுரை மீனாட்சி

மீன்கொடி பறக்கவே மேதினி சிறக்கவே
மிளிர்கின்ற மாமதுரையே
மேகநிறச் சொக்கர் மீனாட்சி கல்யாணம்
மேன்மையாய் நடக்குதங்கே
தேன் சொட்டும் சித்திரையில் திருவிழா நடக்குதே
திக்கெட்டும் மக்கள் வெள்ளம்
தெவிட்டாத மொழிபேசும் சிங்கார கிளியோடு
சிரிக்கின்ற தாயின் உள்ளம்
வான்முட்டும் கோபுரம் வழிந்தோடும் வைகையும்
வையத்தை வாழ வைக்கும்
வாழ்ந்திடும் தமிழ்ச்சங்க வள்ளுவன் குரலோடு
வாழ்வினை உயரவைக்கும்
கோனாட்சி செய்கின்ற மீனாட்சி பவனிவர
கொஞ்சும் எழில் தங்கர தமே
கோடிப்பேர் நெற்றியில் குங்குமம் ஆகியருள்
கோதை மீனாட்சி யுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஞ்சி காமாட்சி

முத்துமணி மண்டபம் ரெத்தினச் சிம்மாசனம்
முழங்கிடும் மணி ஓசையே
முப்பெறும் சக்தியாம் திரிசூலம் ஏந்திடும்
முத்து நகை பெற்ற தாயே
பத்து விரல் சூட்டிய பவழமணி மோதிரம்
பாடக தண்டை கொலுசும்
பச்சையுடன் நீலமும் புஷ்பராகத்திலும்
பதித்திட்ட தாலியழகும்
முத்து மூக்குத்தியும் முழவைரக் கம்மலும்
முத்தார ஒட்டியாணம்
முத்துமணி மாலையுடன் முக்தி தரும் கைகளில்
முக்கனிக் கரும்பு வில்லும்
சித்தத்தில் என்றுமே சக்தியாய விளங்கிடும்
தேவியவள் அருள் மாட்சியே
செந்தமிழ் பாடிடும் சிந்தையில் வாழ்ந்திடும்
தேவியுமை காமாட்சியே.

## காசி விசாலாட்சி

ஆதிசிவன் உடல்மீது பாதி உடல் பெற்றிட்ட
அழகான அன்னை உமையே
ஆற்றல்சேர்சக்தியாய் அகிலத்தை காப்பதற்கு
அருளாகி வடந்த திருவே
வேதனைகள் தீர்க்கின்ற வேல்வழியே அருள் – காட்டி
வெற்றியினை காட்டுவாயே
வெங்கொடுமை தணிக்கின்ற கங்கைநதி
ஓரத்தில் விளையாடும் அன்னைநீயே
மாதவங்கள் செய்கின்ற மாமுனிவர் பலபேர்கள்
வாழ்கின்ற புனித காசி
மாற்றங்கள் செய்கின்ற தீர்த்தங்கள் விளையா
மணக்கின்ற இனிய காசி
சோலையாம் விசாலாட்சியே
சொந்தமென வந்துநிதம் உன்னடியைத் தொழுவோர்க்குத்
துணை நீயெ விசாலாட்சியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வராத நட்பும்
குன்றாத வளமையும், குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும், கோணாத கோலும், ஒரு
துன்பம் இலாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!
ஓம்சக்தியே ஆதிசக்தி மகாசக்தி சரணம்
ஓம் சக்தியே ஞானசக்தி வடிவுடை தாயேசரணம்
ஓம்சக்தி இச்சாசக்தி திருவுடை தாயேசரணம்
ஓம்சக்தி கிரியாசக்தி கொடிவுடை தாயே சரணம்
ஓம்சக்தி மகாசக்தி காமாட்சி தாயே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

காப்பு

அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெய்ஞ்ஞானமிகு
கற்பகவி நாயகன்றாள் காப்பு

நூல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலப்பு பல இசைப் பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ(கு) எறியப்பப்
பேழைவயிறும் பேரும்பாராக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதல் ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனத் படுத்தி
கருத்தினில் கபால வாயில்காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்(கு) அருளி
என்னை அறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனத்தத்(து) அழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே!!

திருச்சிற்றம்பலம்

விநாயகர் அகவல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய னடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின் கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பார்வையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தான்எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினியில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படத்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் கூடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவனீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றா ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரஹணபவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

முந்தித் தவமிருந்து முந்நூறு நாட் சுமந்து
யந்திபக லாய் சிவனை யாதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாய் தனக்கோ
எரியத் தழன் மூட்டினேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமலேந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே –யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டினேன்

வட்டிலிலும் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டு காப்பாற்றிச் சீராட்டுந் தாய் தனக்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டினேன்

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிடு
கைப்புறத்தி லேந்தி கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாம லுருகியுள்ள
தேனே யமிர்தமே திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யெந்தன்
மகனே யெனவழைத்த வாய்க்கு

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையிலே
அன்னை யிட்டதீ யடி வயிற்றிலே
யானு மிட்டதீ மூழ்க மூழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி தங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் ஈழவள நாட்டின் வடபால் உள்ளது யாழ்ப்பாணம். இதன் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது மாதகல் எனும் கிராமம்.

இங்கு வாழும் மக்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் எனப் போற்றி வாழ்பவர்கள் ஆவார். சோழ அரசின் மகள் கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு வழிபட சென்ற போது மாதகல் சம்பில் துறைமுகத்தில் வந்து இறங்கி சென்றதனால் அக்கிராமத்திற்கு மாதகல் என்னும் பெயர் உண்டாயிற்று. இவ்வாறு பல பெருமைகளையுடைய சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இடம் தான் மாதகல் கிராமம்.

இக் கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அரசடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் சைவ வேளாண்குலத்தில் அவதரித்து பார் போற்ற வாழ்ந்த விசுவர் – தெய்வானை என்போருக்கு அருந்தவப் புதல்வியாக 24-07-1924ம் ஆண்டு இப்பூமியிலே அவதரித்தார். இவரின் சகோதரனாக அமரர் மார்க்கண்டு இம் மண்ணிலே அவதரித்தார்.

அமரர் திருமதி சின்னத்தம்பி தங்கம் தனது கல்வியை யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டார். அமரர் தனது சிறு வயதில் இருந்தே கூர்மையான மதிநுட்பமும் இறைபக்தியும் எல்லோரையும் மதிக்கும் பண்பும் கொண்டவராகக் காணப்பட்டார். அவரிடம் காணப்பட்ட வேறுசில சிறப்பம்சங்களாக உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், அடக்கம், பொறுமை, பணிவு, பாசம், அழகு எனும் பெண்மைக்குரிய குணங்கள் அனைத்தையும் கொண்டு விளங்கினார்.

இவர் மணப்பருவம் அடைந்ததும் அவ்வூரில் வாழ்ந்த தியாகர் செல்லமுத்துவின் மகனான சின்னத்தம்பியை திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லறத்தின் பயனாக இராசரத்தினம், இராசமணி, புவனேஸ்வரி, சோதி, ஜெயராணி, சிவபாலன், நிர்மலா என்னும் புதல்வர்களை பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் மூத்த மகன் இராசரத்தினம் பட்டப்படிப்பை முடித்து உத்தியோகம் (ஆசிரியர்) பார்த்தார். இவர் சுதுமலையை சேர்ந்த இராசையா – சௌபாக்கியத்தின் மகளாகிய குணமணிதேவியை (ஆசிரியை) திருமணம் புரிந்து சிறப்புடன் சுதுமலையில் வாழ்ந்து வருகின்றார்.

இரண்டாவது மகள் இராசமணி (அமரர்) வண்ணார் பண்ணையைச் சேர்ந்த வைரவநாதன் தங்கரத்தின் மகன் செல்வராசாவை (அமரர்) திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லறத்தில் பூத்த மலர்களாக விஷாந்தினி, தர்ஷிகா (லண்டன்) ஆகியோர் மலர்ந்தனர். விஷாந்தினி பகீரதனை திருமணம் செய்து தருணிகன், கோசிகா, தேனுஜா எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று சுவிசில் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்.

இவர்களின் மூன்றாவது மகள் புவனேஸ்வரி மாதகலைச் சேர்ந்த வன்னித்தம்பி – தெய்வானையின் மகன் தவராசாவை (அமரர்) திருமணம் செய்து மகாதேவா, மஞ்சுளா, தயாளினி, பிரமிளா எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று சிறப்புடன் வாழ்கின்றார். இவர்களின் மூத்த மகனும் மூத்த பேரனுமாகிய மகாதேவா ரஞ்சினியை மணம் புரிந்து அக்சரன், ராகுல் எனும் மழலைச் செல்வங்களைப் பெற்று சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் பிரான்சில் வாழ்ந்து வருகின்றார். மஞ்சுளா ஞானசீலனை திருமணம் செய்து டிலக்சன், நிதர்சன், வைஸ்ணவி என்னும் மக்கட் செல்வங்களுடன் சீரும் சிறப்புடனும் பிரான்சில் வாழ்ந்து வருகின்றார்கள். தயாளினி கலைச்செழியனை திருமணம் செய்து அதினியை பெற்றெடுத்து மகிழ்வுடன் பிரான்சில் வாழ்ந்து வருகின்றார். பிரமிளா யோகேஸ்வரனை திருமணம் செய்து விதுர்ஷிகா, பவிஷா எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று கனடாவில் சிறப்பான வாழ்வு வாழ்கின்றார்.

நான்காவது மகள் சோதி இளவாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நல்லம்மாவின் புதல்வன் தவச்செல்வத்தை திருமணம் செய்து சுகன்யா, இரகுமலா, சிவறஞ்சினி, சிவகுமரன் ஆகிய மக்கட் செல்வங்களைப் பெற்று, கொலண்டில் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார். சுகன்யா விக்னேஸ்வரனை திருமணம் செய்து அஸ்வினி, அக்ஷயா, அனிக்கா, எனும் மழலைச் செல்வங்களைப் பெற்று கனடாவில் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றார். இரகுமலா துஷ்யந்தனை திருமணம் செய்து கிருத்திக், கம்சிகா எனும் செல்வங்களைப் பெற்று சீரும் சிறப்புடன் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். சிவரஞ்சினி ஜெயக்குமாரைத் திருமணம் புரிந்து கனடாவில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றார். சிவகுமரன் செல்வபாலினியை திருமணம் புரிந்து அருமைப் புதல்வியாக ஆதிரையை பெற்றெடுத்து பிரான்சில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

ஐந்தாவது மகள் ஜெயராணி சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகராசா பாக்கியத்தின் மகன் விஜயராஜாவை திருமணம் செய்து அனித்தா **(Draughtsman Central Engineering consultancy Bureau)** தர்ஷன் (மலேசியா), லக்ஷன் எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று சண்டிலிப்பாயில் சீரும் சிறப்புடனும் வாழ்வதோடு அமரரரை தம் இல்லத்தில் வைத்து இறுதிக் காலத்தில் பராமரித்து பெரும் பாக்கியத்தையும் பெற்று கடமையைத் திறம்படச் செய்து நிம்மதி அடைந்துள்ளார்.

ஆறாவது மகன் சிவபாலன் பண்ணாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் – உமாதேவியின் மகள் குணதேவியை திருமணம் புரிந்து சுவிசில் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஏழாவது மகள் நிர்மலா மாதகலைச் சேர்ந்த மார்க்கண்டு– பாக்கியத்தின் மகன் சிவாஜியை திருமணம் செய்து தனுஜா, தயாளன் (கனடா), கிருஷாந்தன் (ரஷ்யா), கோசிகன், யாழினி எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று அமரரின் பெயர் விளங்க மாதகலில் சிரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரர் தனது கணவருக்கும் பிள்ளைகளுக்குக்கும் உரிய கடமையினை தவறாது செய்து அவர்களின் பேரன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமானார். இவர் உற்றார் உறவினர் அயலவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்பு உடையவரும் வீட்டிற்கு வரும் உறவினர்கள். நண்பர்களுக்கு விருந்தோம்பி உபசரிக்கும் சிறந்த பண்பு கொண்டவராகவும் விளங்கினார்.

ஒருவர் இவ்வுலகில் எண்பத்தொரு வருடங்கள் வாழ்ந்ததால் ஆயிரத்தெட்டு பிறைகண்ட பெருமைக்குரியவர் ஆவார். அமரர் எண்பத்தெட்டு வயதுவரை வாழ்ந்து எண்பத்து நான்கு பிறைகளை மேலதிகமாக கண்ட பெருமையையும் பெற்று தனது இறுதிக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாயில் உள்ள தனது ஐந்தாவது மகள் ஜெயராணியுடன் எதுவித குறையும் இன்றி சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.

இவரின் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அந்நிய நாட்டில் இருந்து இங்கு வரும் காலங்களில் அவர்களுடன் கொஞ்சி, குலாவி கதைத்து அவர்களின் மழலைக் கதைகள் கேட்டு சந்தோசமாக வாழ்ந்து வந்தார். இவ்வாறு மகிழ்ச்சிகரமான சூழலில் வாழ்ந்து வரும்போது முதுமை காரணமாக அமரர் நோய்வாய்ப்பட்டு சில நாட்கள் படுக்கையில் இருக்கும் போது தேடற்கரிய மருமகனினதும், மகளினதும், பேரப்பிள்ளைகளினதும் சிறந்த பராமரிப்பில் இருந்து இனி இவ்வுலகில் வாழ்ந்தது போதும் என்று எண்ணி மகன், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அருகில் இருக்க 26-08-2012 ஆவணி மாதம் 10ம் நாள் பூர்வபக்க தசமித்திதியில் மூல நட்சத்திரமும் கூடிய மாலை நேரத்தில் (7.10 மணியளவில்) தனது வாழ்க்கை பயணத்தை முடித்து இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் பேரிழப்பு எம்மால் ஈடுசெய்ய முடியாத ஒன்று மண்ணில் வாழ்ந்தவர்கள் என்றோ ஒருநாள் விண்ணகம் செல்ல வேண்டியவர்களே அவ்வகையில் அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியை சென்றடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிருடன் வாழும் தெய்வம்

பாரினில் சந்திக்க என்னைச் சுமந்த பத்தினித் தெய்வமே நீங்கள் என்னை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் என்னை விட்டுப் பிரியாது. என் தொலைபேசி எப்போ வரும் என்று காத்திருக்கும் என் காவல்த் தெய்வமே. யார் இனி என் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கப் போகின்றார்கள்? அம்மா நீங்கள் உரையாடும் போது மூச்சுக்கு முன்னூறு தடவை தம்பி தம்பி என்று அழைக்கும் அந்தப் பாசக்குரலை எங்கு போய்க் கேட்பேன்? தம்பியின் உள்ளத்தை நன்கு அறிந்த ஓர் அம்மா நீங்கள் தான். அதனால் தானோ அன்பான கண்டிப்புடன் அறிவுரைகள் பல கூறிடுவீர்கள். அத்தோடு ஆறுதல் வார்த்தைகள் பல பேசி என் உள்ளத்திற்கு அமைதி தருவீர்கள் யார் இனி எனக்கு ஆறுதல் கூற? அம்மா, நீங்கள் தொலைபேசியில் வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பொலி இப்பவும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அச்சிரிப்பொலியை எப்போ? எங்கே தேடுவேன்?

அம்மா நான் உங்களுடன் வாழ்ந்த காலத்தில் வீட்டுக்கு வரத் தாமதித்தால் சாப்பிடாமல் வழிமேல் விளிவைத்து என் வரவை காத்திருப்பீர்களே. என் வரவைக் கண்டதும் உள்ளம் பூரித்தாலும் அதனை வெளிக்காட்டாது அன்பான உரிமையுடன் பேசி அரவணைப்பீர்களே.

தெய்வமே நீங்கள் வருத்தமாக இருந்த போது பார்க்க வரட்டுமா என்று கேட்ட போது நேசத்துடன் நீ உன் உடம்பு சுகத்தைப் பார்த்துக் கொள் நீ நலமாக வாழ்ந்தால் நானும் நலமாக வாழ்வேன் என்று கவலையைக் காட்டிக் கொள்ளாது கூறினீர்களே அம்மா ஒன்றல்ல பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பிரிவு என் மனதை விட்டு நீங்காது அம்மா நீங்கள் வணங்கும் இறைவன் காலடியில் நீங்கள் சரணடைய வேண்டுகின்றேன்.

பாசமுள்ள அம்மாவே பாராயோ எம் துயரை
பித்தர் போல் பிதற்றுகிறோம் அம்மா என்றே
கூறாமல் எமை பிரிந்து எங்குள்ளீர் அம்மா
கொதிக்கின்றதே எங்கள் உள்ளம்
பேசாமல் சென்றீரோ பெருமையோடு எம்
பிரியத்தால் இவ்வுலகை விட்டு
நேசம் உள்ள உங்கள் எண்ணம் எமைவிட்டு
நீங்காது நீள் வையத்தால் வாழும் வரை

***"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்"***

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மகன் சிவபாலன்**
**சுவிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்தின் உறைவிடமே மாமி

என்னை வயிற்றில் சுமக்காவிட்டாலும் உங்கள் உள்ளத்தில் சுமந்த தாய் நீங்கள். தொலைபேசியில் என் கணவருடன் கதைத்துக் கொண்டிருந்தாலும் இடையிடையே என் நினைவாக எங்கே பிள்ளை கூப்பிடு குரலைக் கேட்போம் என்று பாசத்துடன் வினாவுவீர்களே இனி யார் என்குரல் கேட்க பிரியமாகவுள்ளார்கள் மாமி உங்களின் அன்பான வார்த்தையும், பாசமான உறவும், பண்பாகப்பழகும் இயல்பும் என்றும் என் இதயத்தை விட்டு அகலாது.

நீங்கள் கதைக்கும் போது தம்பியின் உடம்பு சுகத்தை வினாவி சில கைவைத்தியங்களும் கூறுவீர்களே மேலும் வாழ்க்கையில் பல கஸ்டங்கள் வந்து போகும் அதற்கெல்லாம் மனம் தளராது தைரியத்துடன் வாழ்வது தான் வாழ்க்கை என்று அடிக்கடி கூறுவீர்களே, இனி இவ்வார்த்தைகளை எங்கே எப்போ கேட்பேன்.

மாமி நாம் என்றும் மாமி மருமகளாக வாழாது தாய் மகளாக வாழ்ந்தோம். நீங்கள் இவ்வுலகைவிட்டு நீங்கினாலும் என் உள்ளத்தை விட்டு நீங்க மாட்டீர்கள் நீங்கள் உங்கள் விநாயகனின் பாதங்களில் சரணடைய வேண்டுகின்றேன்.

**மருமகள் குணதேவி**
**[சுவிஸ்]**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதியின் புலம்பல்

தங்கம் என்று பெயர் கொண்ட என் அம்மா
தரணியிலே தங்கமாக யொலித்தவள் நீ அம்மா
நோயின் பிடியில் துவண்டிருந்த போதும்
பக்குவமாய் பாசத்தில் அழைத்தவள் நீ அம்மா
அன்னை எங்கள் இருப்பிடமோ நீ அம்மா
அமைதி ஒளி பரப்பி விட்டு அணைந்துவிட்ட அகல் விளக்கு நீ அம்மா
கண் உறங்கும் வேளை எல்லாம் கலங்கித் தவிக்கின்றேன்
பத்து மாதம் சுமந்த என் தெய்வத்தை
பக்கத்தில் இருந்து பக்குவமாய் பார்க்க முடியவில்லையே அம்மா
நான் ஓர் பாவி அம்மா
மறு ஜென்மம் ஒன்று உண்டு என்றால்
மறுபடியும் உங்கள் மகளாகப் பிறந்திட வேண்டும் அம்மா

**உங்கள் பிரிவால் வாடும்**
**மகள் சோதி (கொலனி)**

## மூத்த மருமகள் புலம்பல்

பொறுமைக்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்கள் - மாமி
பிரியமுடன் எமைக் கண்டால் உபசரிப்பீர்
வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்த செம்மல் - எமை
முகம் சுழிக்காமல் விருந்தோம்பல் செய்தீர்கள்
முன்மாதிரியாய் திகழ்ந்த உங்களைக் கண்டு
மேதினியில் வியக்கின்றோம் - நாம்
தினம் தினமும் துடிக்கின்றோம் துவழுகின்றோம்
தேற்ற எமை யாருமில்லை விரைந்து வாரீர் மாமி

**அன்பு மருமகள்**
**இ. குணமணிதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளில்

விருட்சமாய் வேரூன்றி
விழுதினை பிரசவித்து
தலைமுறையின் விழுதுகளை
தேடும் வேர்களாய் இருந்தீர்கள் அம்மம்மா

நீங்கள் நீண்ட தூரம்
சென்றுவிட்டீர்கள்
நீங்காத உங்கள் நினைவுகளை
எம்முள் கருத்தரிக்க விட்டு விட்டு.....

அரைப்பேணி நிவாரண அரிசியில் சோறுசமைத்து
வெந்தயக் குழம்புடன் குழைத்து தந்து - எம்
வெறும் வயிற்றை நிரப்பினீர்கள்
என்னுள் பதிந்த எங்கள் ஞாபகம் அழியக்கூடியதல்ல

வானம் பார்த்த பூமியைப் போல்
வீடும் ஆகிப் போனதே அம்மம்மா
தீட்டிய திருநீற்றுப் பட்டையில்
தெய்வத்தின் பிரதிபலிப்பு தாங்கள்

காற்றும் உங்கள் மூச்சை களைந்ததேனோ
பள்ளிபோகும் போதும் பள்ளி விட்டுவரும் போதும்
உங்கள் வீட்டிற்கு வந்து போவோமே
இப்ப யாரைத்தேடி போவோம் அம்மம்மா

நிலம் தந்த இருப்பிடத்தையும்
வளி தந்த சுவாசத்தையும் விட
நீங்கள் தந்த தலைமுறையின் வளர்ச்சி
இம்மானிடப் பிறவியில் வியக்கத்தக்கது

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**பேரன் சி.கிருஷாந்தன்**
**(ரஷ்யா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உள்ளத்திலிருந்து....

உன்னதமான மானிடர்கள் வாழும்
உலகின் சிற்றூர் மாதகலில்
உல்லாசத்திற்கு இடையூறின்றி
உயிர்ப்பறவை போல் திரிந்து வாழ்ந்தீர்களே அம்மம்மா

அன்புத் தாலியிழந்து
அருமைப் புதல்வி ஒன்றை இழந்து
அல்லல் உற்ற வேளைகளிலும் - உன்
அயராத உழைப்பால் எம்மை பண்போடு வளர்த்தீரே அம்மம்மா

பள்ளி முடிந்து உம் வீடு வந்தால்
பண்பாக அழைத்து அன்பு பொழிந்து
படபடவென அன்புக்கதை கூறி
பல விடயம் சொல்லித்தந்தீரே அம்மம்மா

பழகிய உங்களை விட்டு ஊரை விட்டு
பறந்து வெளியூர் சென்று விட்டேன், ஆனால்
பசுமையான நினைவுகளையும் சுமந்து வாழ்க்கையில் - நீரோ
பலமிழந்து படுக்கையில் அமர்ந்து விட்டீரே அம்மம்மா

ஒவ்வொரு நொடியும் எங்களை நாடி
ஓடிய நாட்களில் எத்தனை இன்பம்
ஒரு நிமிடம் அதை நினைக்கையில்
ஓயாத உம் நினைவலைகள் என்னுள் நிழலோடுகின்றதே அம்மம்மா

இன்று உம்மை இழந்த ஒரு நொடிப் பொழுதும்
இமைக்க மறுக்கின்றனவே
இவ்வுலகில் நீரில்லைதான் - ஆனால்
இதமான நம் நெஞ்சில் நினைவலைகளாய் கலந்துள்ளீர் அம்மம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்

**பேரன் சி. தயாளன்**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு பேர்த்தியின் கண்ணீர் துளிகள்

வற்றாத அன்பையும் பாசத்தையும்
ஊட்டி வளர்த்த எனதருமை அம்மம்மாவே
சோகத்தின் வடிவாய் எமையெலல்ாம் தவிக்கவிட்டு
வேதத்தின் உட் பொருளாய் விண்ணோடு சென்றதேனோ?

சின்ன வயதில் இருந்து செல்லமாக பேணி நிதம்
எம் வாழ்வை நெறிப்படுத்த புத்திமதிகள் பலவும் கூறி
என்ன என்ன தியாகங்கள் எமக்காக செய்தீர்கள்
உங்களை நான் என்றென்றும் மறவேன் - அம்மம்மா

எம் அம்மா எமைவிட்டு போன பின்பு
யாருமின்றி அநாதையாக இருந்த எம்மை அரவணைத்து
அம்மாவிற்கு அம்மாவாய் எமக்கென இருந்தீர்களே
உங்கள் அன்பில் என் பெற்ற தாயின்
அன்பைக் கண்டேனே ஆதலால்
இன்று அந்த அன்பை இழந்து அநாதையாக
தவிக்கின்றேன் அம்மம்மா
ரெலிபோனில் ஒரு குரல் பிள்ளை என்று
கேட்டு விட்டால் மறந்திடுவேன் அத்தனை துன்பங்களையும் ஒரு நொடியில்
உங்களைப் போல் கதைப்பதற்கு யாருமில்லை எனக்கு இனி

ஆலமரம் போல் நீங்கள் இருக்க அடிவிழுதாய்
நாம் வாழ்ந்தோம்
ஆலமரமே இன்று சாய்ந்ததனால் நாமுமல்லவா
ஆடிவிட்டோம்
நீங்கள் காட்டிய பாதை தனிலே
நாம் எல்லாம் நடந்திடுவோம்

உங்கள் ஆத்மா அமைதியுடன் சாந்தியடைய
நாம் அனைவரும் இறைவனை வேண்டுகின்றோம்.

**உங்கள் அன்பு பேத்தி றெகா**
**(தர்ஷிகா) லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்டிடும் நினைவுகளில்.....



நாம் தொட்டளைந்த
மாதகல் மண்ணும்
கண்ணயர்ந்த அம்மம்மா
மடி சுகமும்
இனி எக்காலம்?
நினைக்க நினைக்க....
நம் நெஞ்சாங் கூட்டல்
நெருஞ்சி குத்துகிறது........

அது ஒரு காலம்
ஊர்க்கிணற்றில் குளித்து
ஊர்ப்புறத்தில் உலாவி
உன் மடியில் உறங்கி
இரவெல்லாம் கதைபேசி....... என
நாம் வாழ்ந்த வாழ்வெல்லாம் .....இன்று
மண்ணாகிப் போனதே.....

தன்மீது விழும் வெய்யிலை ஜீரணித்து
மண்ணுக்கு நிழல் தரும் மரம்போல
மழையில் நனைந்தும்
வெயிலில் காய்ந்தும்
பசி இருந்தும் ....... எமக்காக
நீ பட்ட துன்பங்கள் ...... இன்றும்
எம்மை வாட்டும் நீண்ட நெடிய நினைவலைகள்........

ஆலமரம் போல
எம்மைக் காத்து நின்ற ஐயா
படுக்கையில் விழுந்த போது........
நம்பிக்கை ஒன்றை மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பிக்கை பலமாகக் கொண்டு எங்கள்
நிமிர்ந்த வாழ்வுக்காய்
வருந்தி உழைத்தாயே........
எவரின் வாசலுக்கும் சென்று
யாசிக்காத நிமிர்வு ஒன்றை– எங்களுக்கு
பெற்றுத் தந்தாயே........
அதை மறப்போமா

தட்ட வேண்டிய நேரத்தில்
தட்டியும் (அடித்தும்)
தட்டிக் கொடுக்க வேண்டிய நேரத்தில்
தட்டிக் கொடுத்தும்... எங்களைப்
பட்டை தீட்டி வைரங்களாக்கிய
"தங்கப் பேத்தி" உன்னைத் தான்
மறக்குமா எம் நெஞ்சம்?
பெற்றதாய் பெரியள் தான்... ஆனால்
நீயே எங்களுக்கெல்லாம்
ஆதிமூலம்

உங்கள் மூச்சுக்காற்றுப் படிந்துள்ள
மாதகல் வீட்டின் ஒவ்வொரு துகள்களும் சரி
நீங்கள் பாதுகை இல்லாப் பாதங்களோடு நடமாடிய
எங்கள் ஊர்த்தெருக்களும் சரி
வயல் வரப்புகளும் சரி
கோயில் குளங்களும் சரி
விளையும் வயல்களும் சரி
அசையும் நாற்றுக்களும் சரி....
தங்கள் "தங்கக் குஞ்சாச்சியின்" வரவுக்காய்
தவித்து தவமிருப்பதை அறியாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற் பொழுதில் எங்களைத் தாலாட்டிய தாயே உன்
இறுதி நாட்களில்
வற்றித் தளர்ந்து வடிவம் இழந்து
ஒட்டிப் போனது தான்
விதியோ...... இல்லை
எங்கள் தங்கத்தை உரசிப்பார்க்க அந்த
இறைவன் செய்த சதியோ........

காலத்தின் கையில்
பிரிவு ஒரு பிரம்பு
அதுதான் அடித்து ...... அடித்து......
வாழ்க்கைக்கு
அர்த்தம் சொல்கிறது......

தாயே இன்று உனக்காக
ஊரெல்லாம் ஒன்றாகி
உறவெல்லாம் ஒன்றாகி எம்
உணர்வெல்லாம் ஒன்றாக்கி
அஞ்சலி செலுத்துகின்றோம்......நாம்
மீண்டும் ஒரு பிறப்பெடுத்தால்
உன் வயிற்றில் பிள்ளைகளாகவும்
உன் மடியில் பேரன் பேத்திகளாகவும் தவழ
வரம் கேட்டுத் தவிக்கும்

**பேரன்**
**மகாதேவா (பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் ஊரின் அன்பின் அரசியே!
# எப்பொழுதும் மழைத் தூறலாய் உன் நினைவுகள்

கண்ணீரில் கரைந்து மாதம் ஒன்று மறைந்ததனை
கனவிலும் நினைவிலும் உன் உருவம்தான் எம் கண்முன்னே!
உனதன்பை எப்படி நாம் மறப்போம்?
சிரித்த முகத்தழகும் நிகரில்லா பாசமும் – உன்
கனிவான பேச்சையும் தான் நாம் மறப்போமா....?

இலையுதிர்ந்த சாலைகளிலும் இடிந்த வீடுகளிலும்
எவரும் வாழ அஞ்சிய நேரத்தில் ஒற்றை பனையாய்
ஊருக்குள் காலடி எடுத்து வைத்தாய்!
உறவுகளை விட ஊரையே அதிகம் நெஞ்சில் சுமந்ததிற்கு
இதைவிட வேறென்ன சான்று வேண்டும்!

ஐயாவை இழந்த துயர் ஆறும் முன்னே – இரண்டு
ஆண்டுகளுக்குள் உன் தவ புதல்வியை நீ இழந்தாய் – ஆனால்
இன்றோ உன்னை இழந்து நாம் தவிக்கின்றோம்!

மாதகல் வீட்டின் திண்ணையில் – உன்னுடன்
அமர்ந்து தேனீர் அருந்திய காலங்கள் இன்னமும்
நினைவில் நிக்குதணை!
உன்னிடம் அபகரிக்க முடியாமல் போனது
பொருளை மட்டுமல்ல உன்
உறுதியையும் கூடத்தான்!

காற்றாய் கரைந்தாய் எம் மூச்சில் நீ கலந்தாய்
நொடிகள் ஒவ்வொன்றும் இமைக்க நாம் மறந்தோம்.
அருகில் நீயில்லை! ஆனால் எம் அனைவரையும்– நீ
அணைத்தே இருக்கின்றாய்!

உனது ஆத்மா சாந்தி பெற
ஆண்டவன் பாதத்தில் வேண்டி நிற்கின்றோம்

**பேரன் வி.தர்ஷன்**
**(மலேசியா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



V. Laxan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



எம்முடன்
24 - 07 - 1924

மண்ணுடன்
26 - 08 - 2012

அமரர்

## சின்னத்தம்பி தங்கம்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
அதனினும் அரிது
விண்ணில் ஒளிரும் மலரால் மலர்வது
மண்ணில் தோன்றும் மானிடர்
அனைவரும் மறைவது என்பது உண்மை
எனினும் திடீரென மறைந்ததால்
பதைக்கிறது எம் உள்ளம்
நீங்கள் மறைந்ததாலும் எங்கள்
மனவறையில் நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி...!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
அங்கணாக்கடவை மீனாட்சிகண்ணகை அம்மன் ஆலய
தொண்டர் சபையினர்
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்

27.08.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

எம்முடன்
24 - 07 - 1924



மண்ணுடன்
26 - 08 - 2012

அமரர்

## சின்னத்தம்பி தங்கம்

ஏங்கிக் கிடக்குதம்மா உன் உறவுகள்
தூங்கிக் கிடக்கின்றாயே!
எத்தனை வார்த்தைகள் சொல்லியிருப்பாய்
அத்தனையும் பேசாமல்
ஊமை போல் உறங்கிக் கிடக்கின்றாயே
எது நடந்தாலும் பரவாயில்லை என்றிருப்பாய்
விதி வலையில் வீழ்ந்து போவாய் என்று யார் நினைத்தார்?
எம் துயர் ஆற்ற ஒரு வார்த்தை பேசி விடேன்!!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி...!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
அங்கணாக்கடவை மீனாட்சிகண்ணகை அம்மன் ஆலய
நிர்வாகசபையினர்
மாகியப்பிட்டி சண்டிலிப்பாய்

27.08.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24 - 07 - 1924



மறைவு
26 - 08 - 2012

வேரூன்றி பல்திசையில் கிளை எறிந்து
விழுதோடி இதம் தந்து விசாலித்த தாயே
உன் உறவுகள் - கலங்குதம்மா
உன் மரணச்செய்தி கேட்டு
பறவைகளும் ஆர்ப்பரிக்குதம்மா
ஆண்டவனின் அடியில் உன்
உயிர்போய் சேர என்றும்
இறைவனை பிரார்த்திக்கிறோம்

சனசமூக நிலைய கணக்காய்வாளராகவும் வளர்ச்சிக்கும்
உதவழங்கி வருகிற
திரு. சி. இராசரத்தினம் அவர்களின்
அன்புத்தாய்

## அமரர்
## சின்னத்தம்பி - தங்கம்

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனை
பிரார்த்திக்கிறோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாவலர் சனசமூக நிலையம்
சங்கத்தானை

# கண்ணீர்ப் பூக்கள்

மண்ணில்
24
~
07
~
1924





விண்ணில்
26
~
08
~
2012



## அமரர் சின்னத்தம்பி தங்கம்

தங்கம் எனும் நாமம் கொண்டு
அனைவரிடமும் தயை காட்டினீர்!
தாயாக நீரெமக்கு நல்வழிகாட்டி
தனியன்பு கொண்டு நின்றீர்!
முருகனுக்கு சேவையாற்றிட - நீர்
தந்தீர் நல்மகனொடு பேரனை
தாயே! உமை யாமினி யெப்பிறப்பில் காண்போம்?
ஆலங்குளாய் முருகமூர்த்தியின் பாதங்களிலே
உம் ஆத்மா சாந்தியுற வேண்டுகின்றோம்!

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*

***ஆலங்குளாய் முருகமூர்த்தி கோயில் தொண்டர் சபையும்***

***ஆலங்குளாய் சனசமூக நிலையமும்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pen Driveகளின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்கு.....

நாம் பயன்படுத்தும் USB PenDrive களின் தகவல்களை பாதுகாக்கவும் Pen Drive களின் ஆயலை அதிகரிக்கவும், ஒரு மென்பொருள் உதவி புரிகின்றது. நல்ல நிறுவனத்தின் PenDrive தான் பயன்படுத்துகின்றேன். ஆனால் சில நேரங்களில் இந்த Pen Drive ல் சேமிக்கப்படும் தகவல்கள் எடுக்க முடியாதபடி பிழையான செய்தி வருகிறது. என்று சொல்லும் அனைவருக்கும் உதவும் வகையில் இந்த மென்பொருள் அமைந்துள்ளது.

இத்தளத்திற்கு சென்று (WWW.usbalert.nl setup (install wizard) என்பதை சொடுக்கி மென்பொருளை இலவசமாக தரவிறக்கலாம். Portable ஆக வேண்டும் என்றால் Portable என்பதை சொடுக்கி மென்பொருளை தரவிறக்கம் செய்யவும். தரவிறக்கிய மென்பொருளை இயக்கியதும் நம் taskbar ல் USB Alert வரும்.

நம் கணனியில் Pen Drive ஐ செருகியதும் நமக்கு Alert Message வரும். அடுத்து Pen Drive ல் தகவல்களை சேமித்து முடித்த பின் இந்த USB Alert I சொடுக்கி Eject என்ற பொத்தானை அழுத்தி Pen Drive ஐ வெளியே எடுக்கலாம். இப்படி எடுப்பதால் Pen Drive ன் ஆயுட்காலமும் தகவலும் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டிருக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வெற்றி பெற.........

கடுமையாக உழையுங்கள்

தன்னம்பிக்கையை விட்டு விடாதீர்கள்

எதிர்காலத்திற்காகப் பொறுமையுடன் இருங்கள்

எப்பொழுதும் இலக்குச் சார்ந்து இருங்கள்

முயற்சியைக் கைவிடாதீர்கள்

தோல்வியை ஏற்றுக்கொண்டு அடுத்த சந்தர்ப்பத்துக்காகக் காத்திருங்கள்

முன்னுதாரணமாக இருங்கள்

எப்போதும் செவிமடுக்க விரும்புங்கள்

உங்களுக்கென சுயதராதரங்களை அமைத்துக் கொள்ளுங்கள்

அர்ப்பணிப்புக்குத் தயாராக இருங்கள்

உங்கள் பலங்களின் மீதிருந்து தொடங்குங்கள்

நம்பிக்கைக்குரியவராகவும் நேர்மையானவராகவும் இருங்கள்

இறை நம்பிக்கையைக் கைவிடாதீர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவி அமரர் சின்னத்தம்பி தங்கம் அவர்களின் சிவபதமடைந்த செய்தியை கேட்டு நேரில் வந்து பங்கு பற்றிய உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் உடன் இருந்து உதவிகள் புரிந்தோருக்கும், தமது அனுதாபச் செய்தியை தொலைத் தொடர்பு மூலம் தெரிவித்த அனைவருக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நோய் வாய்ப்பட்டு இருக்கும் போது அவருக்கு வைத்தியம் செய்த வைத்தியர்களுக்கும், எமக்கு ஆறுதல் வழங்கிய அனைவருக்கும், இம்மலரினை அச்சிட்டு தந்த அச்சகத்திற்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org